7-4-2019 தினகரன்
நாளிதழுடன் இணைப்பு
தினகரன்
• சென்னை 7.4.2019

# தமிழ் வழியில் படித்தவர்களுக்கே ஓவிய, தையல் ஆசிரியர்கள் பணி

## அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஏப். 7: தமிழ் வழியில் படித்ததாக குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் ஓவிய, தையல் ஆசிரியர்கள் பணி நியமனம் வழங்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் ஓவிய ஆசிரியர், தையல் பயிற்சி ஆசிரியர் பணிகளுக்கான தேர்வு தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் 2018 ஜூலை மாதம் அறிவிப்பு வெளியிட்டது.

இந்நிலையில், இந்த தேர்வுக்கு விண்ணப்பித்த ஆனந்த கிருஷ்ணன் என்பவர் உள்பட 80 பேர், தமிழ் வழியில் படித்தவர்களுக்கான 20 சதவீத இட ஒதுக்கீட்டில் தங்களுக்கு பணி நியமனம் வழங்க கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்குகள் நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி அளித்த உத்தரவில், "அரசுப் பள்ளிகளில் ஓவிய ஆசிரியர், தையல் பயிற்சி ஆசிரியர் பணிகளுக்கு ஆன் லைனில் அளித்த விண்ணப்பத்திலும், சான்றிதழ் சரிபார்ப்பு படிவத்திலும் தமிழ் வழியில் படித்ததாக குறிப்பிட்டிருந்தவர்களுக்கு மட்டும் தமிழ் வழியில் படித்தவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் தேர்வு செய்யவேண்டும். அதன்பிறகு உரிய நடைமுறைகளை பின்பற்றி நியமனம் செய்ய வேண்டும். தமிழ் வழியில் படித்ததாக குறிப்பிடாதவர் இந்த இட ஒதுக்கீட்டில் பணி நியமனம் கோர முடியாது" என்று உத்தரவிட்டார்.

www.tnpsc.in

Scanned by CamScanner